


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து – நடராசன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் தலைமை அலுவலகத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் "நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு" நான்காண்டு சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் 16–வது சர்வதேச இயந்திர கருவிகள் கண்காட்சியினை (ACMEE 2025) தொடங்கி வைத்து, கருவிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, ஜோசப் சாமுவேல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் சதீஷ் பாபு, கவுரவ பொதுச் செயலாளர் கே. தவமணி, அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள், தொழில் அதிபர்கள் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.


